மின் உரிமம் வழங்கும் வாரியம்,
கிண்டி, சென்னை - 600 032.

**புதுப்பித்தலுக்கான பொது விவரங்கள்.**

- சான்றிதழ் / உரிமம் புதுப்பிக்க தனியாக விண்ணப்பம் ஏதுமில்லை. முகப்புக் கடிதத்துடன் அனுப்ப வேண்டும்.
- தாமத கட்டணத்தை தவிர்க்க சான்றிதழ் / உரிமம் செல்லத்தக்க காலத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.
- சான்றிதழ் / உரிமம் செல்லத்தக்க காலம் முடிந்து ஓராண்டு காலத்திற்குள் புதுப்பித்தல் மனு அனுப்பி வைக்கும் பட்சத்தில் வழங்கல் கட்டணத்திற்கு ஈடான தொகை செலுத்த வேண்டும்.
- சான்றிதழ் / உரிமம் செல்லத்தக்க காலம் முடிந்து ஓராண்டுக்கு மேலாகிவிட்டால் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும். புதிதாக விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் www.tnelb.gov.in இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சான்றிதழ் புதுப்பித்தலுக்காக முகப்புக் கடிதத்துடன் கீழ்கண்டவற்றை இணைத்து அனுப்ப வேண்டும்.**

1. அசல் தகுதிச் சான்றிதழ்.
2. புதுப்பித்தலுக்கான கட்டணம்.(கட்டண விவரங்கள் அறிய இணையதளத்தில் பார்க்கவும்)
3. மார்பளவுள்ள புகைப்படம்.
4. தனித்தாளில் மாதிரிக் கையொப்பம்.
5. அனுபவச் சான்றிதழ் (இருக்கும் பட்சத்தில்)

**உரிமம் புதுப்பித்தலுக்காக முகப்புக் கடிதத்துடன் கீழ்கண்டவற்றை இணைத்து அனுப்ப வேண்டும்.**

1. அசல் உரிமம்.
2. புதுப்பித்தலுக்கான கட்டணம்(கட்டண விவரங்கள் அறிய இணையதளத்தில் பார்க்கவும்)
3. வங்கி உறுதிப் பத்திரம் அசல். (இபி உரிமம் தவிர்த்து)
4. சோதனை அறிக்கை அசல்.
5. தகுதிச் சான்றிதழ் அசல்.
6. ஒப்புதல் கடிதம் அசல்.
7. வேலை விவரப் பட்டியல்.

- கட்டணம் அனைத்தும் செயலாளர், மின் உரிமம் வழங்கும் வாரியம் (Secretary, Electrical Licensing Board) என்ற பெயரில் **வங்கி வரைவோலை** (Demand Draft) அல்லது **அஞ்சலாணை** (Indian postal order) சென்னையில் மாற்றத்தக்க வகையில் (payable at **Chennai**) பெற்று அனுப்ப வேண்டும். கட்டணங்கள் வேறு எந்த வகையிலும் ஏற்க இயலாது.
- **<u>இரண்டாம்படி</u> (DUPLICATE)** சான்றிதழ் / உரிமம் காணாமற்போய்விட்டால் அதனை நிரூபிக்கும் தக்க சான்றுகளுடன் (காவல் துறையினரின் சான்றிதழ் மற்றும் நோட்டரி பப்ளிக்கிடம் சத்திய வாக்குமூலம்) அதற்குரிய கட்டணத்துடன் (கட்டண விவரம் அறிய இணையதளத்தில் பார்க்கவும்) இரண்டு அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் இரண்டு மாதிரி கையொப்பம் ஆகியவற்றை அனுப்பி வைத்து இரண்டாம்படி பெற்றுக் கொள்ளலாம்.